செ.வெ.எண்:45/2017 நாள்:14.10.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை சுற்றி அமைந்துள்ள நீர் நிலையங்களுக்கு செல்லும் கால்வாய்களை இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**






சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை சுற்றி அமைந்துள்ள நீர் நிலையங்களுக்கு செல்லும் கால்வாய்களை இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட செட்டியூரணி, சாத்தப்ப ஊரணி, மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் பாலம், சட்டமன்ற அலுவலக எதிரில் உள்ள பாலம், மாவட்ட கண்காணிப்பாளர் எதிரில் உள்ள பாலம், மாவட்ட ஆட்சியர் அலுவலக சுற்றுப்புறு வரத்துக் கால்வாய், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு ஏ2-பி பிளாக், சி2-டி பிளாக் 300 இந்தோ திபெத் எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் துணையோடு தூர்வாரும் பணிகள் துவங்கப்பட்டது. சுமார் 8 இடங்களில் 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்ட பகுதிகளில் வீரர்கள் தங்களது தூர்வாரும் பணியினை மேற்கொண்டனர்.

- மாவட்ட ஆட்சியர் அலுவலக முன்வாசல் புதிய நுழைவாயில் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர் குடியிருப்பு.
- மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகப் பகுதி
- மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு அமைந்துள்ள பகுதி
- சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் ‘இ’ பிளாக் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பின்பகுதி.
- ‘டி’ பிளாக் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பின்பகுதி மற்றும் சுந்தரமகாலிங்கம் கோவில் பகுதி.
- ‘ஏ’ பிளாக் சார் ஆட்சியர் குடியிருப்பு முன்பகுதி.
- மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவாயில் பகுதியிலிருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகப் பகுதி வரை.

இப்பணிக்கு மாவட்ட நிர்வாக வேண்டுகோளுக்கிணங்க, டாக்டர் ஆஸ்டின் இப்பன் அவர்கள் இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 300 நபர்களை அனுப்பியுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி, சிவகங்கை உட்கோட்டம் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.மங்களேஸ்வரன், இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை துணைக் கண்காணிப்பாளர் திரு.மனோஜ், வட்டாட்சியர் திரு.கந்தசாமி, சிவகங்கை காவல் ஆய்வாளர் திரு.மோகன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், காவல் துறையினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.